18.06.2022 ஆரம்பம்

இலவச கருத்தரங்கு

2022 புலமைப்பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு



ஆசிரியர் இ.பிரசாந்தன்

NDT, primary ,B.Ed(hons)primary R

புலமை வித்தகன் நூலாசிரியர்

Director

LEARN EASY

KNOWLEDGE IS POWER

சனிக்கிழமைகளில்

மாலை 4.00 மணிக்கு

- சுற்றாடல் பரிசோதனைகள்
- தெரிந்தெடுக்கப்பட்ட நுண்ணறிவு
- கடந்த கால 5 வருட வினாத்தாள்கள்
- கட்டுரையாக்க அமைப்பு முறை

www.learneasy.lk 0766674945

www.tkedu.lk



புலமை வித்தகன்

புலமை வித்தகன் வெளியீடு

5

தரம் 5

தொடர் - 1 இலவசக்கருத்தரங்கு

ஆசிரியர் இ.பிரசாந்தன் **வினாத்தாள் - 1** **தரம்**

சரியான விடையின் கீழ்க்கோடிடுக

1. ஒருவர் 50 வினாக்களைக் கொண்ட வாய்மொழி வினாப்போட்டியில் கலந்து கொள்கிறார். இவர் சரியாகப் பதிலளிக்கும் ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வழங்கப்படும். பிழையாகப் பதிலளிக்கும் ஒரு வினாவுக்குப் பெற்ற புள்ளியிலிருந்து ஒரு புள்ளி குறைக்கப்படும் எனின், 85 புள்ளிகளைப் பெறும் ஒருவர் எத்தனை வினாக்களுக்கு சரியான விடை அளித்திருப்பார்?
   1. 40 2. 45 3. 43

2. மூன்று குயவர்கள் மூன்று மணித்தியாலங்களில் முப்பது பானைகள் செய்வார்கள். ஆகவே ஒரு குயவர் இருபது பானைகள் செய்வதற்கு எத்தனை மணித்தியாலங்கள் செலவாகும்?
   1. 2 மணித்தியாலங்கள் 2. 5 மணித்தியாலங்கள் 3. 6 மணித்தியாலங்கள்


3. வியாபாரி ஒருவரிடம் 5kg பருப்பு இருந்தது. அதில் நான்கு 500g பொதிகளும், எட்டு 250g பொதிகளும் தயாரித்த பின் எஞ்சியதை 100g கொண்ட பொதிகளாக்கினான் எனின், அவன் தயாரித்த மொத்த பொதிகளின் எண்ணிக்கை எத்தனை?
   1. 25 2. 22 3. 30

4. 6m தூரத்திற்கு சீரான இடைவெளியில் நடுவதற்கு 7 கம்புகள் தேவை. 18m தூரத்திற்கு அதே சீரான இடைவெளியில் கம்பு நடுவதற்கு எத்தனை கம்புகள் தேவை ?
   1. 21 கம்புகள் 2. 18 கம்புகள் 3. 19 கம்புகள்

5. பாடசாலை ஒன்று ஆரம்பிக்கும் போது முதலாவது மணி ஒலிக்கும். இரண்டாவது மணியானது 10 நிமிடத்தின் பின்னரும் மூன்றாவது மணி 5 நிமிடத்தின் பின்னரும் ஒலிக்கும். அடுத்து வரும் ஒவ்வொரு 40 நிமிடத்தின் பின்னர் மணி ஒலிக்கும் எனின் ஆறாவது தடவை மணி ஒலிக்கும் போது நேரம் 9.30 எனின் பாடசாலை ஆரம்பிக்கும் நேரம் யாது?
   1. காலை 7.15 2. காலை 7.20 3. காலை 7.30

6. ஒரே அளவுடைய 6 அட்டைப் பெட்டியின் சில முகங்களில் பசையைப் பூசி அவற்றை ஒட்டி ஆக்கப்பட்ட உரு ஒன்று அருகே தரப்பட்டுள்ளது. பசை பூசி இணைக்கப்பட்ட பெட்டியின் முகங்கள் எத்தனை?

   1. 6
   2. 10
   3. 12




7. அமல் 150 முறை துள்ளும் போது விமல் 200 முறை துள்ளுவான். விமல் 100 முறை துள்ளும் போது கமல் 80 முறை துள்ளுவான் எனின் இங்கு வேகம் குறைவாக துள்ளுபவர் யார்?
   1. விமல் 2. கமல் 3. அமல்

www.lkedu.lk

8. வகுப்பறை ஒன்றினை துப்பரவு செய்வதற்கு நாள் ஒன்றுக்கு 5 மாணவர்கள் வீதம் ஆசிரியர் தெரிவுசெய்திருந்தார். அவர்கள் வகுப்பை கூட்டுவதற்கு 2 மணிநேரம் எடுத்துக்கொள்வார்கள். ஒருமுறை இரு மாணவர்கள் மட்டுமே வருகை தந்திருந்தனர் எனின் அவர்கள் வகுப்பறையை கூட்டுவதற்கு எவ்வளவு நேரம் எடுத்திருக்கும்?
   1. 4 2. 3 3. 5

9. வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 14 ஆகும். வினாடி வினா போட்டி ஒன்றில் ஆண் மாணவர்கள் 6 பேரும் பெண் மாணவர்களை ஒவ்வொருவரையும் ஒவ்வொரு வினா வீதம் கேட்டனர். வகுப்பில் கேட்கப்பட்ட வினாக்களின் எண்ணிக்கை யாது?
   1. 6 3. 36 3. 48

10. பெரிய வட்டம் ஒன்றினுள் நான்கு சிறிய வட்டங்களும் ஒவ்வொரு சிறிய வட்டத்தினுள் அதிலும் சிறிய நான்கு வட்டங்களும் வரையப்பட்டிருந்தன. வட்டங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
   1. 19 2. 20 3. 21

11. 

இங்கு A,B,C குறிப்பது
   1. பிராணிகள், பறவை, கிளி
   2. பிராணிகள், கிளி, பறவை
   3. பறவை, பிராணிகள், கிளி

12. ஒருவர் தினமும் அலுவலகமொன்றில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 5.00 வரைக்கும் கடமையாற்றுகின்றார். மதியம் 1 மணித்தியாலம் உணவிற்காக ஓய்வு பெறுகிறார். ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாளெனில் அவர் வாரத்தில் எத்தனை மணித்தியாலங்கள் வேலை செய்கின்றார் ?
   1. 7 3. 49 3. 42

13. இரண்டு குதிரைகள் ஓரிடத்திலிருந்து புறப்பட்டு எதிர்த்திசையில் 50m தூரம் செல்கின்றன. பின்னர் ஒரு குதிரை இடப்பக்கமும் மற்றைய குதிரை வலப்பக்கமும் திரும்பி ஒவ்வொரு 100m தூரம் செல்கின்றன.இப்போது இரண்டு குதிரைகளுக்கிடையிலான தூரம் எவ்வளளவு ?
   1. 100m 2. 300m 3. 150m

14. ஓர் அனர்த்தம் காரணமாக மே 14ஆந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் உட்படத் தொடர்ச்சியாக 9 நாட்களும் ஒரு பாடசாலை மூடப்பட்டது. அப்பாடசாலை மறுபடியும் திறக்கப்பட்ட தினம் யாது ?
   1. 23 புதன் 2. 22 செவ்வாய் 23. 23 செவ்வாய்

15. A இலிருந்து நகரம் B வரையுள்ள தூரம் 5km 750m ஆகும்.நகரம் B இலிருந்து நகரம் c வரையுள்ள தூரம் 7km 500m ஆகும்.நகரம் A இலிருந்து நகரம் B இன் ஊடாக நகரம் C வரை உள்ள மொத்த தூரம் யாது ?
   1..13km 250m 2. 1km 750m 23. 12km750m

16. ராஜாவிடம் இருந்த பணத்தொகையை விட 25 ரூபாய் கூடுதலாக ஆரியாவிடம் இருந்தது. ஆரியா 15 ரூபாவை ராஜாவுக்குக் கொடுத்தால், ராஜாவிடம் உள்ள பணத்தொகை ஆரியாவிடம் உள்ள பணத்தொகையிலும்,
   1. ஐந்து ரூபாவினால் கூடியது.
   2. பத்து ரூபாவினால் கூடியது.
   3. பத்து ரூபாவனால் குறைவானது.

17. ஒரே நேரத்தில் மரதன் ஓட்டப் போட்டியை ஆரம்பித்த நான்கு பிள்ளைகள் அப்போட்டியை முடித்துக் கொண்ட நேரங்கள் தரப்பட்டுள்ளன.

குமார்	மு.ப 11.20
ரவி	மு.ப 11.02
தினேஸ்	மு.ப 10.59
வரதன்	மு.ப 10.57

www.lkedu.lk

இதற்கேற்ப போட்டியில் முதலாம் இடத்தையும் நான்காம் இடத்தையும் பெற்ற பிள்ளைகளை முறையே காட்டும் விடை எது?

1. வரதன் , தினேஸ்
2. வரதன் குமார்
3. ரவி, குமார்

18. ஒரு குழுவிலுள்ள 6 பேர்களிடையே ஒவ்வொரு ஆண்களுடைய கையிலும் 2 பேனைகளும் , ஒவ்வொரு பெண்களுடைய கையிலும் 3 பேனைகளும் வைத்திருந்தனர். அவர்களிடம் காணப்பட்ட பேனைகளின் மொத்த எண்ணிக்கை 16 எனின் அக்குழுவில் இருந்த ஆண்களின் எண்ணிக்கை யாது?

1. 4 2. 2 3. 3

19. 12 மீற்றர் நீளமும் 8 மீற்றர் அகலமும் உடைய செவ்வக வடிவ தகரத்துண்டிலிருந்து 4 மீற்றர் நீள அகலமுடைய சதுரத் துண்டுகள் எத்தனை வெட்டலாம்?

1. 12 2. 8 3. 5

20. பாடசாலையொன்றில் பரீட்சை எழுதிய மொத்த மாணவர்களில் $\frac{2}{5}$ பேர் சித்தியடைந்தனர், சித்தியடையாத மாணவர்களின் எண்ணிக்கை 60 எனின் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை யாது?

1. 150 2. 90 3. 40

LEARN EASY
KNOWLEDGE IS POWER
zoom வகுப்புக்கள்
Grade 1 - A/L
Medium
TAMIL / ENGLISH
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி
Call:
76667 4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk